# சீராக்கல் வரைபடமாக்கல்:

## அரச சேவைகள்
## தொடர்பான கைநூல்
## நகர அபிவிருத்தி அதிகார சபைகள்



Australian Government
AusAID

The Asia Foundation

DFID Department for International Development

# உள்ளடக்கம்

*முகவுரை* ........ ii
*சீராக்கல் வரைபடம் - பயன்படுத்துனர் வழிகாட்டி* ........ iii
அனுமதிக்கப்படாத கட்டிடத்தை இடித்தல் ........ 1
காணி கையகப்படுத்தல் ........ 5
குடியிருப்புக் கட்டிடங்களின் பாவனையை மாற்றுவதற்காகிய அனுமதிப்பத்திரம் ........ 9
சுற்றுலா தொடர்பான கருத்திட்டங்களுக்காக ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ் / கடிதம் ........ 13
ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ் / கடிதம் ........ 17
அலைவாங்கிக் கோபுரங்களுக்காகிய ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ் ........ 21
நெற்காணிகளை நிரப்புவதற்காகிய ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ் ........ 25

# முகவுரை

இந்தப் பதிப்பானது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை தெளிவுபடுத்துகின்ற ஒரு வழிகாட்டியாகச் செயற்படுவதைக் கருதுகின்றது. இது பரந்த செயற்பாடுகளுக்கான விரிவான விபரங்களைக் கொண்ட சட்டமுறைமைகள், கட்டணங்கள், விண்ணப்பிக்கும் செயன்முறை, கால அளவு, கிடைக்கின்ற வளங்கள் என்பனவற்றை வழங்குகின்றது. தனியாட்களும் வர்த்தக நிறுவனங்களும் நகர அபிவிருத்தி அதிகார சபை சேவைகளின் சட்ட செயன்முறைச் சூழலை சரியாகப் பின்பற்றுவதில் சிக்கலையும் தெளிவின்மையையும் உடையனவாகக் காணப்பட்டுள்ளன. அண்மையில் ஆசியா நிலையத்தின் அனுசரனையுடன் நடத்தப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி இது சம்பந்தமான தகவல்கள் மக்களுக்கு மிக இலகுவாக விளங்கிக் கொள்ளக்கூடியவகையில் கிடைக்கப் பெறாமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வழிக்காட்டியானது அனுமதிக்கப்படாத கட்டிடங்களை இடிக்கும் செயன்முறை அல்லது குடியிருப்புக் கட்டிடங்களின் பாவனையை மாற்றுவதற்காகிய அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்வதில் எது சம்பந்தப்பட்டுள்ளது என்பன பற்றி ஆராய்கின்றது, உதாரணமாக. இது நகர அபிவிருத்தி அதிகார சபையின் சேவைகள், அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன குறித்து பொது மற்றும் வர்த்தகச் சமூக உறுப்பினர்களுக்கு அறியத்தருவதுடன், பொருளாதார வளர்ச்சிக்கான சூழ்நிலைகளை விருத்தி செய்தல், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களுக்கான சாதகமானதொரு சூழலை ஏற்படுத்துதல் போன்றன குறித்தும் ஆராய்கின்றது.

இந்த ஆய்வுக்கான நிதியுதவி சர்வதேச அபிவிருத்திக்கான அவுஸ்திரேலிய முகவர் அமைப்பாலும் சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தினாலும் (UK) வழங்கப்பட்டது.

# சீராக்கல் வரைபடம் - பயன்படுத்துனர் வழிகாட்டி

- பல்வேறு பரஸ்பர செயற்பாடுகளும் அகரவரிசைப்படி உள்ளது.
- ஒவ்வொரு பகுதியும் செயன் முறையின் சாராம்சத்துடனான வரைபடத்துடன் தொடங்குகின்றது.
- அடுத்ததாக உள்ள உண்மையான விவரணம் பரிசீலனையில் உள்ள செயன்முறையை மிகவும் விரிவாக அளிக்கின்றது.
- ஒவ்வொரு பகுதியும் அதனது நோக்கத்தினையும் உள்ளடக்கத்தின் விபரங்களை வினா முறையிலும் விபரிக்கின்ற ஒரு முன்னுரையுடனேயே தொடங்குகின்றது.
- இதனைத் தொடர்ந்து சட்ட அதிகாரத்தின் உடைய ஒரு சுருக்கமான விபரணமும் குறிப்பட்ட சட்ட துணைச்சட்டங்களின் உசாத்துணைக்காக உள்ளது.
- ஒவ்வொரு பகுதியிலும் உள்ள மீதித் தகவல்கள் பரஸ்பர செயற்பாடுகளின் சூழலைப் பொறுத்தது. ஒவ்வொரு விடயத்திலும் ஒரு விண்ணப்பத்தை அல்லது வேண்டுகோளை எவ்வாறு செய்வது, யாருக்கு அது சமர்ப்பிக்கப்படல் வேண்டும், என்ன கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும், மேலும் ஏதாவது தேவைப்பட்டால் விண்ணப்பப்படிவம் கொண்டிருக்கும் அவசியமான தகவல்கள், ஆவணங்கள் என்பன போன்ற விபரங்களை அந்த விண்ணப்பம் கட்டாயம் கொண்டிருக்கும். சில விடயங்களில் பிணக்குகள் விண்ணப்பதாரிக்கும் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குமிடையில் எழக்கூடும். அவ்வாறான விடயங்களில் நாங்கள் பிரச்சினைத் தீர்வு செயன்முறையைப் பற்றி விபரித்திருக்கின்றோம்.
- பொதுவாக இப்பதிப்பில் குறிப்பாகச் சொல்லப்பட்டிருக்கும் செயற்பாடுகளுக்கு (சில விடயங்களைத் தவிர, உதாரணமாக, காணி கையகப்படுத்தல்) கால வரையறை இல்லை. பொதுவாக நகர அபிவிருத்தி அதிகார சபையின் தீர்மானத்துடன் முரண்படுகின்ற போது விண்ணப்பதாரிக்கு மேன் முறையீடு செய்ய குறிப்பிட்ட கால வரையறை உண்டு.
- பெரும்பாலான செயற்பாடுகளுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபை உரிய நியமங்களுடனான விண்ணப்பத்தை பொதுமக்களிடம் இருந்து தகவல்களைப் பெறுவதற்கு வழங்குகின்றது. பொதுவாக இந்தப் படிவங்கள் சிங்கள மொழியிலேயே கிடைக்கின்றது.

# அனுமதிக்கப்படாத கட்டிடத்தை இடித்தல்

**மேலோட்டம்**

உள்ளூராட்சி அதிகார சபையின் தொழில்நுட்ப அலுவரினால் அனுமதிக்கப்படாத நிர்மாணம் ஆய்வு செய்யப்படல்

↓

உள்ளூராட்சி அதிகார சபையின் தொழில்நுட்ப அலுவலரினால் அனுமதிக்கப்படாத கட்டிடத்தின் வரைபடம் சிவப்பு நிறத்தில் வழங்கப்படுகின்றது.

↓

அனுமதிக்கப்படாத கட்டிடத்திற்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய படி முறைகளையிட்டு உள்ளூராட்சி அதிகாரசபையின் திட்டமிடற் குழு தீர்மானம் எடுக்கின்றது.

↓

திட்டமிடற் குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானம் பற்றி அனுமதிக்கப்படாத கட்டிடத்தின் உரிமையாளருக்கு அறிவித்தல் அனுப்பப்படுகின்றது.

## 1. அறிமுகம்

ந.அ.அ. சட்டத்தின் கீழ் அபிவிருத்தியடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் எந்தவிதமான கட்டிடத்திற்கும் ந.அ.அ.இன் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் சட்டத் தேவையாகும். நகர அபிவிருத்தி அதிகாரசபை அனுமதிக்கப்படாத கட்டிடத்தை இடிப்பதற்கு அதிகாரத்தைக் கொண்டுள்ளது.

## 2. சட்ட அதிகாரம்

- *1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கம் மற்றும் 1984 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்கச் சட்டங்களினாற் திருத்தப்பட்ட 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டம்*
- *நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 28A(5)*

## 3. செயன்முறை

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| அனுமதிக்கப்படாத கட்டிடத்தை ஆய்வு செய்தல் | | உள்ளூராட்சி அதிகார சபையின் தொழில்நுட்ப அலுவலர் |
| அனுமதிக்கப்படாத கட்டிடங்கள் வரைபடத்தில் சிவப்புநிறத்தில் காட்டப்படுகின்றன | | உள்ளூராட்சி அதிகார சபையின் தொழில் நுட்ப அலுவலர் |
| அனுமதிக்கப்படாத கட்டிடம் பற்றி படிப்படியான எடுக்கப்பட்ட தீர்மானங்கள் | | உள்ளூர் அதிகார சபையின் திட்டமிடற் கிளை |
| அனுமதிக்கப்படாத கட்டிடத்தின் உரிமையாளருக்குத் தீர்மானம் பற்றி அறிவித்தல் அனுப்பப்படுகின்றது | | திட்டமிடற் குழுவின் தலைவர் |
| உள்ளூராட்சி அதிகார சபையினாற் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு ஏற்ப உரிமையாளர் நடந்து கொள்ளல் வேண்டும். | | |

## 4. பின்பற்றாமையின் சட்ட விளைவு

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமா அல்லது இல்லையா எனத் திட்டமிடற் குழு தீர்மானம் எடுக்கின்றது. | | |
| உள்ளூராட்சி அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. | | நீதவான் நீதிமன்றம் |
| உள்ளூராட்சி அதிகார சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கவில்லையெனில், ந.அ.அ. சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. | | நீதவான் நீதிமன்றம் |
| இதற்கு இணங்க இடித்தல் நடை பெறுகின்றது. | | |

### குறிப்பு:

*நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் 28 A (5) ஆம் பிரிவின் கீழ் இடித்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தையும் அறவிடுவதற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரிமையுளது.*

# காணி கையகப்படுத்தல்



## 1. அறிமுகம்

நகரத்தின் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக, நிருவாக மையமொன்றை அல்லது சந்தை, விளையாட்டு மைதானம் என்பனவற்றை ந.அ.அ. நிர்மாணிப்பதற்காக காணியொன்றைக் கையகப்படுத்த வேண்டுமென அரசாங்கம் தீர்மானம் எடுக்கும் பொழுது, பின்பற்றப்பட வேண்டிய செயன்முறையொன்றுள்ளது.

## 2. சட்ட அதிகாரம்

- *1986 ஆம் ஆண்டின் 13 இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட 1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்கக் காணி கையகப்படுத்தற் சட்டத்தின் 2, 5, 6, 7, 9, 10, 17 மற்றும் 38 (A) பிரிவுகள்.*

## 3. செயன்முறைகள்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| உத்தேசிக்கப்பட்ட காணியில் சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழில் அறிவித்தல் வைக்கப்பட்டது | 14 நாட்கள் | பிரதேசச் செயலாளர் |
| சொத்தைக் கையகப்படுத்தும் கட்டளை | 1 கிழமை | பிரதேசச் செயலாளர் |
| முன்கூட்டி ஓர் வரைபடம் தயாரிக்கப்பட்டது | 1 மாதம் | நில அளவைத் திணைக்களம் |
| ஆரம்ப வரைபடம் தயாரிக்கப்பட்டது | 1 கிழமை | நில அளவைத் திணைக்களம் |
| காணியின் ஆட்சி சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு கையளிக்கப் பட்டது | 1 கிழமை | பிரதேசச் செயலாளர் |
| காணியைக் கையேற்றல் பற்றி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது | 1 கிழமை | பிரதேசச் செயலாளர்/ அரசாங்க அச்சகர் |
| சொத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படுகின்றது | 2 கிழமைகள் | மதிப்பீட்டுத் திணைக்களம் |
| விசாரணையொன்று நடாத்தப்பட்டு அதன் மூலம் காணியின் உரிமை தீர்மானிக்கப்படுகின்றது | 2 கிழமைகள் | பிரதேசச் செயலாளர் |
| காணியின் உரிமை பற்றி வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரிக்கப்படுகின்றது | 2 கிழமைகள் | பிரதேசச் செயலாளர் |
| கையகப்படுத்திய காணிக்கு நட்டஈடு 12% வருடாந்த வட்டியுடன் சம்பந்தப்பட்ட நிறுவகத்திடமிருந்து கோரப்பட்டது | 1 கிழமை | பிரதேசச் செயலாளர் |
| நட்ட ஈட்டுத் தொகை பிரதேசச் செயலகத்தில் வைப்பிலிடப்பட்டது | 1 கிழமை | காணியைப் பொறுப்பேற்ற சம்பந்தப்பட்ட நிறுவகம் |
| உரிமையாளர்/களுக்கு நட்டஈடு வழங்கப்பட்டது | 1 கிழமை | பிரதேசச் செயலாளர். |

## 4. நட்ட ஈட்டுத் தொகை பற்றி மேன்முறையீடு செய்தல்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| நட்டஈடு பற்றி உரிமையாளர் மேன்முறையீடு செய்தல் | 14 நாட்களுக்குள் | மீளாய்வுச் சபை |

### குறிப்பு:

*மீளாய்வுச் சபை 10 உறுப்பினர்களை அடக்கியதாக இருக்கும். மீளாய்வுச் சபையின் தலைவர் ஒய்வுபெற்ற ஓர் நீதிபதியாகவும், ஐந்து உறுப்பினர்கள் நீதித்துறையைச் சேர்ந்தவர்களாகவும், ஏனையோர் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் முன்மொழியப்பட்ட மதிப்பீட்டாளர்களை அடக்கியதாகவும் இருக்கும்.*

# குடியிருப்புக் கட்டிடங்களின் பாவனையை மாற்றுவதற்காகிய அனுமதிப்பத்திரம்

**மேலோட்டம்**

விண்ணப்பப் படிவத்தை ந.அ.அஇன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பகுதி அல்லது ந.அ.அ. உப அலுவலகங்களிற் பெற்றுக் கொள்க.

↓

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் ந.அ.அ. இன் சம்பந்தப்பட்ட விடய எழுதுநரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

↓

குடியிருப்புக் கட்டிடங்களின் பாவனையை மாற்றுவதற்காகிய அனுமதிப்பத்திரம் ந.அ.அஇன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பகுதிப் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்களினால் வழங்கப்பட்டது.

## 1. அறிமுகம்

ஆளொருவர் தற்பொழுது இருக்கும் குடியிருப்புக் கட்டிடங்களை வர்த்தகத் தேவைகளுக்காக மாற்றவிரும்பின், இதற்காக ந.அ. அதிகார சபையிடமிருந்து அனுமதிப்பத்திரம் பெறுதல் அவசியமாகும்.

## 2. சட்ட அதிகாரம்

- *10.03.1986 ஆந் தேதிய ந.அ.அ. இன் வர்த்தமானியில் உப பகுதி V இன் துணைச்சட்டம் 8 (i மற்றும் ii) பிரிவு*
- வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டபடி பிரதேசத்திற்காக அபிவிருத்தித் திட்டத்தின் திட்டமிடற் பிரமாணம் *(பகுதி 11)*
- *1982 ஆம் அண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபைத் (திருத்தச்) சட்டம்.*

## 3. கட்டணங்கள்

வேறு தேவைக்காகப் பாவிக்கப்பட இருக்கும் குடியிருப்புக் கட்டிடத்தின் தரைப் பரப்பு அளவின்படி செயன்முறைப்படுத்தற் கட்டணத்தை விண்ணப்பதாரி ந.அ.அக்குச் செலுத்துதல் வேண்டும்.

| தரை (சதுரமீட்டர்) | கட்டணம் + பெ.சே.வ ரூபா |
|---|---|
| *45 க்குக் கீழ்* | *500* |
| *45 - 90* | *750* |
| *91 - 180* | *1,000* |
| *181 - 270* | *2,500* |
| *271 - 450* | *3,750* |
| *451 - 675* | *5,000* |
| *676 - 900* | *7,500* |
| | ஒவ்வொரு கூடுதல் *90* ச.மீ.க்கும் *1000* |

### குறிப்பு:

*குடியிருப்புக் கட்டிடம் என்பது சிறப்பாக ஒரு குடியிருப்பு அலகையோ அல்லது பல குடியிருப்பு அலகுகளையோ கொண்டுள்ளதாக இருக்கும்.*

## 4. உதவிடும் ஆவணங்கள்

- மாற்றி அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் கட்டிடம் அமைந்திருக்கும் வளாகத்தை அடையாளம் காண்பதற்காக அதனைச் சுற்றி இருக்கும் பிரதேசத்தைக் காட்டும் வரைபடமொன்று.
- நில அளவை வரைபடத்தின் வரைபடம்
- உள்ளூராட்சி அதிகார சபையினால் அனுமதிக்கப்பட்ட தெளிவான கட்டிட வரைபடமும் உத்தரவுப் பத்திரமும்
- விதிகளைப் பின்பற்றியமை தொடர்பான சான்றிதழின் (C of C ) பிரதி

- வளாகத்திற்குள் ஒதுக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடத்தின் ஓர் வரைந்த படம் (வாகனத் தரிப்பிட விளக்கப் படம்)
- காணி உரிமையாளரினதும் குடியிருப்பாளரினதும் தேசிய அடையாள அட்டைகளின் பிரதிகள்
- காணியின் இயற்கை நிலக்காட்சியின் வரை படம் காட்ட வேண்டியவை:
    i. தொடர்ந்து வைத்திருக்கவிரும்பும் மரங்களும் பயிர் வளர்ப்புக்களும்
    ii. இயற்கை நிலக்காட்சியின் முன்மொழிவுகள்
    iii. வெளித்தோற்ற வடிவமைப்புடன் முன்மொழிவுகளை விபரிக்குக.

### குறிப்பு:

*எல்லா வரைபடங்களிலும் மாற்றியமைக்க வேண்டிய பகுதி சிவப்புமையினால் அடையாளமிடப்படல் வேண்டும். அறைகளின் எல்லாப் பரிமாணங்களும், கட்டிடத்தின் வெவ்வேறு பகுதிகளும் காட்டப்படல் வேண்டும் என்பதுடன், வரைபடத்தில் ஒவ்வொரு அறையினதும் கட்டிடத்தின் ஒவ்வொரு பகுதியினதும் உத்தேசிக்கப்பட்ட பாவனையையும் சுட்டிக் காட்டுதலும் வேண்டும்.*

## 5. செயன்முறைகள்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்க. | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பகுதி அல்லது ந.அ.அ உப அலுவலகங்கள். |
| பூர்த்தி செய்த விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். | | ந.அ.அ.இன் சம்பந்தப்பட்ட விடய எழுதுநர். |
| குடியிருப்புக் கட்டிடத்தின் பாவனையை மாற்றுவதற்காகிய உத்தரவு பத்திரம் வழங்குதலின் தீர்மானம். | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவின் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்கள். |

## 6. பின்பற்றாமையின் சட்ட விளைவு

*1982 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைத் (திருத்தச்) சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க இயலும்.*

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| குறிக்கப்பட்ட கட்டிடத்திற்கு முத்திரை பொறிக்கப்பட்டது. | | ந.அ.அ. |
| சட்ட நடவடிக்கை ந.அ.அ. யினால் எடுக்கப்பட்டது. | | நீதவான் நீதிமன்றம் |

## சுற்றுலாத் தொடர்பான கருத்திட்டங்களுக்காக ஆரம்பத்திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ்/கடிதம்

**மேலோட்டம்**



## 1. அறிமுகம்

சுற்றுலா ஹோட்டல்கள், சுற்றுலாப் பூங்காக்கள், உணவகங்கள் என்பவற்றின் நிர்மாணம் போன்ற கருத்திட்டங்களுக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து தடைநீக்கற் சான்றிதழ் பெறுதல் கட்டாயமாகும்.

## 2. சட்ட அதிகாரம்

- *10.03.1986 ஆம் தேதிய 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ந.அ.அ. பிரமாணங்களின் 10(1-3) பிரிவின் கீழ்*
- *1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபையின் (திருத்தச் )சட்டம்.*

## 3. கட்டணங்கள்

விண்ணப்பப் படிவத்தின் செலவினம் பின்வருமாறு வேறுபடும்.

| தூரம் | ஒரு விண்ணப்படிவத்தின் செலவினம் ரூபா |
|---|---|
| ந.அ.அ.உப அலுவலகத்திலிருந்து 50 கி.மீ. வரையிலான தூரம் | 3,450 |
| ந.அ.அ. உப அலுவலகத்திலிருந்து 50 கி.மீ / 100 கி.மீ. இடையிலான தூரம் | 5,750 |
| ந.அ.அ.உப அலுவலகத்திலிருந்து 100 கி.மீ.க்கு அப்பாலுள்ள தூரம் | 8,625 |

செயன்முறைக் கட்டணம் பின்வருமாறு வேறுபடும்.

| தூரம் | செயன்முறைக்கட்டணம் ரூபா |
|---|---|
| மாநகர எல்லைகளுக்குள் | 5,000 + பெசேவ |
| நகரத்திற்கு வெளியே 50 கி.மீ. வரை | 7,500 + பெசேவ |
| நகர எல்லைகளிலிருந்து 50 கி.மீ. -75 கி.மீ. இடையிலான தூரம் | 10,500 + பெசேவ |
| நகர எல்லைகளிலிருந்து 75 கி.மீ.க்கு அப்பால் | 12,500 + பெசேவ |

### குறிப்பு:

*காசோலை வடிவில் கொடுப்பனவு செலுத்தப்படுமெனில் காசோலை 'நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் எனக் குறிப்பிட்டு வரையப்படல் வேண்டும்.*

## 4. உதவிடும் ஆவணங்கள்

- i. புதிய அபிவிருத்தி எனில், கருத்து வடிவமைப்பின் முன் மொழிவு

  ii. கட்டிடத்தின் அனுமதிக்கப்பட்ட வரைபடம் மற்றும் ஏலவே இருக்கும் கட்டிடமெனில் விதிகளுக்கு ஏற்ப நடந்துள்ளமை பற்றிய சான்றிதழ் என்பவற்றின் ஒவ்வாரு பிரதி.
- காணியின் நில அளவை வரைபடத்தின் பிரதி
- சென்றடையும் எல்லா வீதிகளையும், நிரந்தரக் காணி எல்லை அடையாளங்கள் முதலியவற்றைக் காட்டும் வரைபடம். (நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர் ஒருவர் இடத்திற்கு வருகை தருவதற்கு)

## 5. செயன்முறைகள்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| தடைநீக்கப் படிவத்தைப் பெறுக | | இலங்கை சுற்றுலாச் சபை |
| இ.சு.சபையினால் இணைப்பிரதியில் ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. | | • நகர அபிவிருத்தி அதிகாரசபை<br>• விருத்தி செய்பவர் |
| விண்ணப்பதாரி ஆரம்பத்தடை நீக்கப்படிவத்தைப் பெறுகின்றார். | | நகர அபிவிருத்தி அதிகார சபை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | | ந.அ.அ.இன் எந்த உப அலுவலகத்தின் சம்பந்தப்பட்ட விடய எழுதுநர் அல்லது அலுவலர் |
| ஆய்வு செய்தல் | 1-3 கிழமைகள் | நகரத் திட்டமிடலாளர்/ திட்டமிடல் அலுவலர் திட்டமிடல் அலுவலர் பிரதிப்பணிப்பாளர் மட்டத்திலான அலுவலர். |
| விண்ணப்பம் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யுமாயின் அனுமதி வழங்கப்படுகின்றது. | | ந.அ.அ. இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது உப அலுவலகம் |
| ஆரம்ப திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ் நிபந்தனைகளுடன் (வழி காட்டிநெறி) வழங்கப்பட்டது | | பணிப்பாளர் ந.அ.அ. இன் தலைமை அலுவலக ஒழுங்கு விதிகள் பிரிவு அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்கள் |

## 6. பின்பற்றாமையின் சட்ட விளைவு

*1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டத்திற்கு இணங்க சட்டநடவடிக்கை எடுக்க இயலும்.*

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| உள்ளூராட்சி அதிகார சபையின் திட்டமிடற்குழு சட்டநடவடிக்கை எடுக்க வேண்டுமா அல்லது இல்லையா எனத் தீர்மானிக்கின்றது. | | |
| உள்ளூராட்சி அதிகாரசபை சட்ட நடவடிக்கையை எடுக்கின்றது. | | நீதவான் நீதிமன்றம் |
| உள்ளூராட்சி அதிகார சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வில்லையெனில் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br><br>இதன்படி ஐம்பதினாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டத்தையும் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனையையும் விதிக்க இயலும். | | நீதவான் நீதிமன்றம் |

# ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ்

**மேலோட்டம்**

ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது ந.அ.அ.இன் உப அலுவலகங்களிலிருந்து விண்ணப்பப் படிவத்தைக் கட்டணத்திற்குப் பெற்றுக் கொள்க.

↓

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது ந.அ.அ.இன் உப அலுவலங்களின் சம்பந்தப்பட்ட விடய எழுதுநரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

↓

நகரத்திட்டமிடலாளர் / திட்டமிடல் அலுவலகர் / திட்டமிடல் அலுவலரினால் ஆய்வு செய்தல்.

↓

விண்ணப்பம் எல்லாம் தேவைகளையும் பூர்த்தி செய்திருப்பின் ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவினால் அல்லது உப அலுவலகங்களினால் அனுமதியை வழங்கப்படுகின்றது.

↓

ந.அ.அ.இன் தலைமை அலவலக ஒழுங்குவிதிகள் பிரிவின் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்களினால் ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

## 1. அறிமுகம்

ந.அ.அ.இன் அதிகார எல்லைக்குள் உள்ள பிரதேசங்களுக்குள் எந்தக் காணியின் நில உடமையின் அபிவிருத்திக் கருத்திட்டம் எதுவெனிலும், ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழொன்று பெற்றுக் கொள்ளல் வேண்டும். இது ஏனெனில், பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசத்திற்கான வலையத்திட்டமிடலுக்கு இணங்க அபிவிருத்தி இருத்தல் வேண்டும் என்பதற்காகவேயாகும். இந்தச் சான்றிதழ் எழுத்து மூலமாக இருக்கும் என்பதுடன் எந்தக் காணி/நில உடமையின் அபிவிருத்தி நடவடிக்கைக்காக ந.அ.அ.வினால் விதிக்கப்படக்கூடிய கட்டுப்பாடுகள் மற்றும் நிபந்தனைகளை உள்ளடக்கியதாகவும் இருக்கலாம். இந்தச் சான்றிதழ் ஒருவருடகால அளவிற்குச் செல்லுபடியுள்ளதாக இருக்கும். ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ், ஓர் உத்தரவுப் பத்திரமாக அமையாது என்பதும் விண்ணப்பதாரியோ அல்லது வேறு எந்த ஆளோ அபிவிருத்தி நடவடிக்கை எதனையும் ஆரம்பிக்கவோ அல்லது நடாத்துவதற்கோ உரிமையற்றவருமாவார்.

ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ்/கடிதம் நிபந்தனைகளுடன் (வழிகாட்டி நெறி) ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகத்தின் பணிப்பாளரினால் வழங்கப்படுகின்றது.

## 2. சட்ட அதிகாரம்

- *10.03.1986 ஆம் தேதிய 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ந.அ.அஇன் பிரமாணங்களின் பிரிவு 10(1-3) இன் கீழ்*
- *1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்*

## 3. கட்டணங்கள்

விண்ணப்பப் படிவத்தின் செலவினம் பின்வருமாறு வேறுபடலாம்:

| நோக்கம் | ஒரு விண்ணப்பப் படிவத்தின் செலவினம் ரூபா |
|---|---|
| குடியிருப்பு நோக்கம் | 575 |
| வர்த்தகம், காணி உப பிரிவாக்கல், திருத்த நிலையங்கள், கைத்தொழில்கள் முதலியன | 862 |

செயன்முறைப்படுத்தற் கட்டணம் பின்வருமாறு வேறுபடலாம்:

| தூரம் | செயன்முறைப்படுத்தற் கட்டணம் ரூபா |
|---|---|
| மாநகரசபை எல்லைகளுக்குள் | 5,000 + பெசேவ |
| நகரத்திற்கு வெளியே 50 கீமீ வரை | 7,500 + பெசேவ |
| நகர எல்லைகளிலிருந்து 50 கீமீ-75கீமீ | 10,500 + பெசேவ |
| நகர எல்லைகளிலிருந்து 75 கிமீ க்கு அப்பால் | 12,500 + பெசேவ |

## 4. உதவிடும் ஆவணங்கள்

- "C" படிவம் பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
- உறுதியின் பிரதி
- நில அளவை வரைபடத்தின் பிரதி
- நில உரிமையாளரின் இணக்கக் கடிதம்
- அமைந்திருக்கும் இடத்தைக் காட்டும் வரைந்தபடம்

## 5. செயன்முறைகள்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| கட்டணத்திற்கு விண்ணப்பப் படிவத்தைப் பெறுக | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது உப அலுவலகங்கள் |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் ஒப்படைக்கப்படல் வேண்டும். | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது ந.அ.அ.இன் எந்தவொரு மாகாண அல்லது உப அலுவலகச் சம்பந்தப்பட்ட விடய எழுதுநர் |
| ஆய்வு நடாத்துதல் | *1-3* கிழமைகள் | நகரத்திட்டமிடலாளர்/திட்டமிடல் அலுவலர்/திட்டமிடல் உதவியாளர் |
| விண்ணப்பம் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யுமெனில் அனுமதி வழங்கப்படுகின்றது. | *2-3* நாட்களுக்குள் | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது உப அலுவலகங்கள் |
| ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கற்அலுவலக சான்றிதழ் கடிதம் நிபந்தனைகளுடன் (வழிகாட்டிநெறி) வழங்கப்படுகின்றது. | | ந.அ.அ.இன் தலைமை ஒழுங்குவிதிகள் பிரிவின் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாண பணிப்பாளர்கள் |

### குறிப்பு:

*1) அதே தடைநீக்கத்திற்கு நீடிப்பொன்றை எழுத்து மூலமாக ஆரம்பச் சான்றிதழை வழங்கிய அதே இடத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (ந.அ.அ. இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் கிளையிலிருந்து அல்லது ந.அ.அ.இன் உப அலுவலகத்திலிருந்து)*

*2) துண்டுகளாகப் பிரிக்கும் திட்டத்தில், உப பிரிவாக்கப்பட வேண்டிய காணி அல்லது இடம் 1.0 கெக்டரை விஞ்சுமெனில், காணி அல்லது இடத்தின் பத்து சதவீதத்திற்குக் குறையாத பிரதேசம் சமூக மற்றும் பொழுது போக்குத் தேவைகளுக்காக பொருத்தமான அமைவிடங்களின் வீதிகளுக்கு நீங்கலாக ஒதுக்கப்படுமெனில், அத்தகைய ஒதுக்கிய இடம் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் எதுவித கட்டணமுமின்றி கையகப்படுத்தப்படும்.*

## 6. பின்பற்றாமையின் சட்ட விளைவு

*1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டத்திற்கு இணங்க சட்ட நடவடிக்கை எடுக்க இயலும்.*

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| உள்ளூராட்சி அதிகார சபையின் திட்டமிடற் குழு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா அல்லது இல்லையா எனத் தீர்மானம் எடுக்கின்றது. | | |
| உள்ளூராட்சி அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. | | நீதவான் நீதி மன்றம் |
| உள்ளூராட்சி அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுக்கவில்லையெனில் ந.அ.அ.வினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி ஐம்பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாத தண்டத்தையும் அல்லது இரு வருட காலப்பகுதிக்கு மேற்படாத சிறைத் தண்டனையையும் விதிக்கலாம். | | நீதவான் நீதி மன்றம் |

# அலைவாங்கிக் கோபுரங்களுக்காகிய ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ்

**மேலோட்டம்**

ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது ந.அ.அ.உப அலுவலகங்களில் விண்ணப்பப் படிவங்களைப் பெறுக.

↓

ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது ந.அ.அ.இன் உப லுவலகங்களின் சம்பந்தப்பட்ட விடய எழுதுநரிடம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தை ஒப்படைத்தல்.

↓

நகரத் திட்டமிடலாளர் / திட்டமிடல் அலுவலகர்/ திட்டமிடல் உதவியாளரினால் ஆய்வு.

↓

விண்ணப்பம் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்திருப்பின் ந.அ.அ.இன் தலைமை அலுவலகக் கட்டுப்பாட்டுப் பிரிவினால் அல்லது உப அலுவலகங் களினால் அனுமதி வழங்கப்படுகின்றது.

↓

ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவின் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்களினால் ஆரம்ப திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ் வழங்கப்படுகின்றது.

## 1. அறிமுகம்

செய்தித் தொடர்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் பெருக்கங்களுடன் தொலைத் தொடர்பு சேவைகளைக் கையாளும் பலவிதமான கம்பனிகளும், அலைவாங்கிக் கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு, இந்தக் கோபுரங்கள் காட்சி மாசுறுதலையும் சுற்றவுள்ள குடியிருப்புக்களுக்குப் பிரச்சினைகளையும் உருவாக்கும் என்பதால் ந.அ.அ.இன் அனுமதியைப் பெறுதல் வேண்டும்.

## 2. சட்ட அதிகாரம்

- *10.03.1986 ஆம் தேதிய 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ந.அ.அ. இன் பிரமாணங்களின் 10(1-3) விதியின் கீழ்*
- *1982 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைத் (திருத்தச்) சட்டம்.*

## 3. கட்டணங்கள்

விண்ணப்பத்தின் செலவினம் பின்வருமாறு வேறுபடலாம்.:

| தூரம் | விண்ணப்பப்படிவத்தின் செலவினம் ரூ |
|---|---|
| ந.அ.அ. உப அலுவலகத்திலிருந்து 50 கி.மீ. வரையுள்ள தூரம் | 3,450 |
| ந.அ.அ.உப அலுவலகத்திலிருந்து 50 கி.மீ - 100 கி.மீ. வரையுள்ள தூரம் | 5,750 |
| ந.அ.அ. உப அலுலகத்திலிருந்து 100 கி.மீ.க்கு கூடுதலான தூரம் | 8,625 |

செயன்முறைப்படுத்தற் கட்டணம் பின்வருமாறு வேறுபடலாம்:

| தூரம் | செயன்முறைப்படுத்தற் கட்டணம் ரூ |
|---|---|
| மாநகர சபை எல்லைகளுக்குள் | 5,000 + பெசேவ |
| நகரத்திற்கு வெளியே 50 கி.மீ. வரை | 7,500 + பெசேவ |
| நகர எல்லைகளிலிருந்து 50 கி.மீ. - 75 கி.மீ. வரை | 10,500 + பெசேவ |
| நகர எல்லைகளிலிருந்து 75 கி. மீட்டருக்கு அப்பால் | 12,500 + பெசேவ |

## குறிப்பு:

*கொடுப்பனவு காசோலை மூலம் செய்யப்படுமெனில், காசோலை நகர அபிவிருத்தி அதிகாரசபைத் தலைவர் என்று வரையப்படல் வேண்டும்.*

## 4. உதவிடும் ஆவணங்கள்

- கோபுரக் கட்டிடத்தின் நிலைப்புத்திறன் பற்றி தகுதிவாய்ந்த கட்டிட எந்திரியிடமிருந்து ஓர் சான்றிதழ்
- i. பாதுகாப்பு அமைச்சு
  ii. குடிசார் விமானப் போக்குவரத்துத் திணைக்களம்
  iii. மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பனவற்றிடமிருந்து தடை நீக்கங்கள்.

## 5. செயன்முறைகள்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| கட்டணமொன்றிற்கு விண்ணப்பப் படிவத்தைப் பெறுக | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது உப அலுவலகங்கள். |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்தல் வேண்டும். | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது ந.அ.அ.இன் மாகாண அல்லது உப அலுவலகங்களின் விடய எழுதுநர். |
| ஆய்வு செய்தல் | *1-3* கிழமைகள் | நகரத் திட்டமிடலாளர்/திட்டமிடல் அலுவலர்/திட்டமிடல் உதவியாளர். |
| விண்ணப்பம் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யுமெனில் அனுமதி வழங்கப்படுகின்றது. | *2-3* நாட்களுக்குள் | ந.அ.அ. இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவு அல்லது உப அலுவலங்கள் |
| ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கச் சான்றிதழ் கடிதம் வழங்கப்படுகின்றது. | | ந.அ.அ.இன் தலைமை அலுவலக ஒழுங்குவிதிகள் பிரிவுப் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப்பணிப்பாளர்கள். |

## 6. பின்பற்றாமையின் சட்ட விளைவு

*1982* ஆம் ஆண்டின் *04* ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைத் (திருத்தச்) சட்டத்தற்கு இணங்க சட்ட நடவடிக்கை எடுக்க இயலும்.

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| உள்ளூராட்சி அதிகார சபையின் திட்டமிடற் குழு, சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா அல்லது இல்லையா எனத் தீர்மானம் எடுக்கின்றது. | | |
| உள்ளூராட்சி அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. | | நீதவான் நீதிமன்றம் |
| உள்ளூராட்சி அதிகாரசபை சட்ட நடவடிக்கை எடுக்கவில்லையாயின் ந.அ.அ.யினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதன்படி ஐம்பதினாயிரம் ரூபாவிற்குக் குறையாத தண்டத்தை அல்லது இரண்டு ஆண்டு காலப் பகுதிக்கு மேற்பட சிறைத்தண்டனையை விதிக்கலாம். | | நீதவான் நீதிமன்றம் |

# நெற்காணியை நிரப்புவதற்காகிய ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ்/கடிதம்

**மேலோட்டம்**

ந.அ.அ.இன் தலைமை அலுவலக முறைப்படுத்தற் பிரிவிலிருந்து / சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்களைப் பெறவும்.

↓

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் எந்தவொரு ந.அ.அ. இன் உப அலுவலக விடய எழுதுநரிடம் அல்லது அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

↓

நகரத்திட்டமிடலாளர் / திட்டமிடல் அலுவலர்/ திட்டமிடல் உதவியாளரினால் ஆய்வு செய்தல்.

↓

விண்ணப்பம் எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யுமெனில் ந.அ.அ.இன் தலைமை அலுவலகத்தின் முறைப்படுத்தற் பிரிவு அல்லது உப அலுவலகங்களினால் அனுமதி வழங்கல்

↓

முறைப்படுத்தற்பிரிவின் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்களினால் நெற்காணி பண்படுத்தற் ஆரம்பத் திட்டமிடற் தடை நீக்கக் கடிதம் வழங்கப்படும்.

↓

நெற்காணிப்பண்படுத்தற்காகிய ஆரம்ப திட்டமிடற் தடைநீக்கக் கடிதத்தின் பிரதிகள் அனுப்பப்படுகின்றது.

↓

- சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபை (பிரதேச சபை/ நகரசபை / மாநகர சபை)
- கமநல சேவைத் திணைக்களம்
- காணிப் பண்படுத்தல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்
- அபிவிருத்தி செய்பவர்
- மத்திய சுற்றாடல் அதிகார சபை.

# நெற்காணியை நிரப்புவதற்காகிய ஆரம்பத் திட்டமிடற் தடைநீக்கச் சான்றிதழ்/கடிதம்

## 1. அறிமுகம்

நெற்காணிகளை நிரப்புவதற்குக் கமநலச் சேவைகள் திணைக்களத்திடமிருந்து அனுமதியைப் பெறுதல் ஓர் சட்டத் தேவையாகும். நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பிரகடனப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் குறித்த நோக்கங்களுக்காக கமநலச் சேவைகள் திணைக்களம் அனுமதியை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து கோருகின்றது.

## 2. சட்ட அதிகாரம்

- 10.03.1986 ஆம் தேதியின் 392/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ந.அ.அ. இன் பிரமாணங்கனின் 10(1-3) பிரிவின் கீழ்

## 3. கட்டணங்கள்

விண்ணப்பத்தின் செலவினம் பின்வருமாறு வேறுபடலாம்:

| நோக்கம் | விண்ணப்பத்தின் செலவினம் ரூபா |
|---|---|
| குடியிருப்பு நோக்கங்களுக்காக | 575 |
| வர்த்தகம், காணிகள் உப பிரிவாக்கல் திருத்தும் நிலையங்கள், கைத்தொழில்கள் முதலியன. | 862 |

செயற்படுத்தற் கட்டணங்கள் பின்வருமாறு வேறுபடலாம்:

| தூரம் | செயற்படுத்தற் கட்டணம் ரூபா |
|---|---|
| மாநகரசபை எல்லைகளுக்குள் | 5,000 + பெசேவ |
| 50 கி.மீ வரை தூரமுள்ள நகருக்கு வெளியே | 7,500 + பெசேவ |
| 50 கிமீ - 75 கி.மீ க்கு இடையில் | 10,500 + பெசேவ |
| 75 கிமீ க்கு அப்பால் | 12,500 + பெசேவ |

## 4. உதவிடும் ஆவணங்கள்

- உறுதியின் பிரதி
- நில அளவை வரைபடத்தின் பிரதி
- காணி உரிமையாளரின் இணங்குதற் கடிதம்
- அமைந்திருக்கும் இடத்தைக் காட்டும் வரைந்த படம்

## 5. செயன்முறைகள்

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| விண்ணப்பப் படிவத்தைப் பெறுக | | ந.அ.அ. இன் தலைமை அலுவலக முறைப்படுத்தற் பிரிவு /சம்பந்தப்பட்ட உபஅலுவலகம் |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்தல் வேண்டும் | | எந்தவொரு ந.அ.அ. இன் உப அலுவலகத்தின் சம்பந்தப்பட்ட விடய எழுதுநர் அல்லது அலுவலர். |
| ஆய்வு செய்தல் | | நகரத் திட்டமிடலாளர்/ திட்டமிடல் அலுவலர்/ திட்டமிடல் உதவியாளர் |
| விண்ணப்பம் அனைத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்யுமெனில், அனுமதி வழங்கப்படுகிறது. | | ந.அ.அ. இன் தலைமை அலுவலக முறைப்படுத்தற் பிரிவு அல்லது உப அலுவலகம் |
| நெற்காணியைப் பண்படுத்துவதற்காகிய ஆரம்பத் திட்டமிடற் தீர்வுக் கடிதம் வழங்கப்படுகிறது. | | முறைப்படுத்தற் பிரிவின் பணிப்பாளர் அல்லது உப அலுவலகங்களின் மாகாணப் பணிப்பாளர்கள். |
| நெற்காணியை பண்படுத்துவதற்காகிய ஆரம்பத் திட்டமிடற் தீர்வுக் கடிதத்தின் பிரதிகள்<br>1. சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபை (பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை)<br>2. கமநலச் சேவைத் திணைக்களம்<br>3. காணி பண்படுத்தல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்<br>4. தேவையெனில் மத்திய சுற்றாடல் அதிகார சபை<br>5. அபிவிருத்தி செய்பவர் ஆகியோருக்கு அனுப்புதல் வேண்டும். | | |
| நெற்காணியை நிரப்புவதற்காகிய இறுதித் தீர்வுக் கடிதம் கமநலச் சேவைத் திணைக்களத்தினால் வழங்கப்படும். | | கமநலச் சேவைத் திணைக்களம் |

### குறிப்பு :

- *அபிவிருத்தி செய்பவர் ஒருவர் நெற்காணியை நிரப்புவதற்கு விரும்பின், அவர் ந.அ.அ. யைத் தவிர, கிராம சேவை அலுவலர், வீதி அபிவிருத்தி அதிகார சபை (வீ.அ.அ) மாநகரசபை / பிரதேச சபை, இலங்கைக் காணி பண்படுத்தற் கூட்டுத்தாபனம் தேவையெனில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை போன்ற வேறுபல நிறுவகங்களிடமிருந்தும் தடைநீக்கங்களைப் பெறுதல் வேண்டும்.*
- *திட்டமிடற் தடைநீக்கற் கடிதம் ஒரு வருடகாலத்திற்கு மட்டும் வழங்கப்படுகின்றது.*

## 6. பின்பற்றாமையின் சட்ட விளைவு

| நடைமுறை | கால அளவு | அதிகாரி |
|---|---|---|
| கமநலச் சேவைகள் திணைக்களம் சட்ட நடவடிக்கை எடுக்கின்றது. | | நீதவான் நீதிமன்றம் |

## ஆசியா நிலையம்

www.asiafoundation.org

ஆசியா நிலையமானது அமைதியான அபிவிருத்திக்கும், செழிப்பிற்கும் நீதிக்கும் திறந்த ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்ற ஒரு இலாப நோக்கமற்ற அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்நிறுவனம் ஆசியாவில் நல்லாட்சி, சட்டம், சிவில் அமைப்பு, மகளிர் வலுவூட்டல், பொருளாதார மறுசீரமைப்பு அபிவிருத்தி, சர்வதேச உறவுகள் என்பனவற்றை மேம்படுத்துகின்ற செயற் திட்டங்களுக்கு உதவியளிக்கின்றது. ஆசியாவில் 50 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்ட ஆசியா நிலையமானது தனியார் மற்றும் அரசதுறைப் பங்காளர்களுடன் இணைந்து தலைமைத்துவ, நிறுவன ரீதியான அபிவிருத்தி பரிமாற்றங்கள், கொள்கை ஆராய்ச்சி என்பனவற்றிற்கு உதவுகின்றது. சன்பிரான்சிஸ்கோ நகரில் தலைமையகத்தை கொண்டுள்ள ஆசியா நிலையமானது ஆசியா முழுவதும் 17 அலுவலகங்களைக் கொண்டு ஒரு வலையமைப்பாக நாடு பிராந்தியம் என்ற இரண்டு மட்டங்களிலும் இவ்விடயங்களைக் கையாளுகிறது.

2007 ம் ஆண்டில் 68 மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கும் அதிகமான தொகையை நிதி உதவியாக வழங்கியதுடன் 33 மில்லியன் அமெரிக்க டாலர் பெறுமதியான 974,000 புத்தகங்களையும், கல்வி உபகரணங்களையும் ஆசியாமுழுவதும் விநியோகித்தது.


**இலங்கை**

3/1A, ராஜகீய மாவத்தை

கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: (94) 11 2698356/7

தொலை நகல்: (94) 11 2698358

tafsrilanka@asiafound.org